திருவையாறு

ஐயாறா - பஞ்சநதீஸ்வரமா?

பெரும்புலவர் ப. அரங்கசாமி
தலைவர், தமிழகப் புலவர் குழு

6-9-2001

12, புதுத்தெரு, லால்குடி – 621 601
போன் : 0431 – 541 552.

திருவையாறு

ஐயாறா - பஞ்சநதீஸ்வரமா?

பெரும்புலவர் ப. அரங்கசாமி

வளமை

சோழ நாட்டில் நஞ்சை வளம் கொஞ்சும் தஞ்சாவூருக்கு வடக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் காவிரியாற்றின் வடகரையில் இடங்கொண்ட ஊர் திருவையாறு.

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்க நடந்தாய்வாழி காவேரி"

என்றும்

"பூவர் சோலை மயிலால் புரிந்துகுயில்கள் இசைபாடக்
காமர்மாலை மருங்கசைய நடந்தாய் வாழி காவேரி"

என்றும், அன்று இளங்கோவடிகள் கண்ட காவிரி நங்கையின் பூவாடை போர்த்தப் புனித நடையையும், மாலை சூடி மருங்கசையும் மாநடையையும் இன்றும் நாம் காண நடக்கிறாள் இங்கே காவேரி.

"உழவர் ஓதை மதகோதை உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி"

என அடிகள் அன்று கேட்ட ஓசைகளை இன்றும் நாம் கேட்குமாறு காவிரி நங்கை எழுப்பிக் கொண்டிருக்கிறாள்.

இங்ஙனம் நீங்காத நீர்ப்பெருக்கம் நிலையான நிலப்பரப்பும் கொண்டது திருவையாறு.

தலைவர், தமிழகப் புலவர் குழு, 12, புதுத்தெரு,
லால்குடி - 621 601 போன் : 0431 - 541 552.

"தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கத் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருந்த மாதோ"

எனக் கம்பர் காட்டிய மருதநில அரசி கொலுவீற்றிருக்கும் கோலம் கொண்ட மருதநிலம் திருவையாறு

மற்றும்

கர்நாடக இசை வாணர்களால் போற்றி மதிக்கப்படும் இசைவாணர் தியாகராஜர் (தியாகையர்) இங்கு வாழ்ந்து தெலுங்கில் இசைப் பாடல்கள் (கீர்த்தனைகள்) பாடி, சமாதி கொண்டது இவ்வூரில் தான்.

அரசர் கல்லூரி

இவ்வூருக்குத் தனிச்சிறப்பு இங்குள்ள அரசர் கல்லூரி. இது தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அரசரால் சமஸ்கிருதம் பயிற்றுவிக்கும் நிலையமாக நிறுவப்பட்டது.

பின்னர், கரந்தைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளை, சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் முதலிய பெருமக்கள் முயற்சியால் இந்நிலையம் தமிழும் சமஸ்கிருதமும் பயிற்றுவிக்கும் கல்லூரியாக உயர்த்தப் பெற்று, 'தமிழ் சமஸ்கிருதம் பயிலும் அரசர் கல்லூரி' எனப் பெயர் கொண்டது. (Rajah' College of Tamil and Sanskrit Studies). இப் போது அரசர் கல்லூரி எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

இக்கல்லூரியில் முறையான பாடத்திட்டங்களுடன் நான்காண்டுகள் தமிழ்ப் பயின்றோர்க்குப் பல்கலைக் கழகத்தேர்வு மூலம் புலவர் (முன்பு வித்துவான்) பட்டயமும், சமஸ்கிருதம் பயின்றோர்க்கும் 'சிரோமணி' பட்டயமும் (Oriental Titles) பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டது.

3612

இக்கல்லூரியில் பயின்று புலவர் பட்டயம் பெற்ற நூற்றுக்கணக்கான புலவர்கள் தமிழகமெங்கும் தமிழாசிரியர்களாகப் பணியேற்றனர். இத்தகைய புலவர்களுள் அடியேனும் ஒருவன் (1937-41).

இப்போது இக்கல்லூரிக் கலைக் கல்லூரியாக (Arts College) நடத்தப்படுகிறது.

இங்ஙனம் இசையிலும் தமிழிலும் சிறந்து விளங்குவது திருவையாறு.

கோயில்

இப்பதியில் ஐயாறப்பர் - அறம்வளர்த்தி நாயகியான கடவுளர் உறையும் பெரிய கோயில் ஊரின் நடுநாயமாக விளங்குகிறது. கோயிலைச் சுற்றி நாற்புறமும் நீண்டுயர்ந்த மதில்களுடன் விளங்கும் அகன்ற வீதிகள் ஊருக்கு அழகு செய்கின்றன.

இப்பதி இறைவனைப் போற்றி ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் தேவாரப் பதிகங்கள் பாடினர். மாணிக்கவாசகர் 'ஐயாறு' என்றும் 'ஐயாற்றரசே' என்றும் திருவாசகத்தில் கூறினார்.

இவ்வாறு சைவ சமய நிலைக்களனாகவும் விளங்குவது திருவையாறு.

பெயர் மாற்றம்

இத்தகைய சிறப்புக்களோடு, காரணங்களில் அடிப்படையில் 'ஐயாறு' என்ற பெயர் கொண்டு தொன்றுதொட்டு வழங்கிவரும் ஊர்ப் பெயரை வடமொழியாளர் சமஸ்கிருதத்தில் 'பஞ்சநதீஸ்வரம்' எனவும், ஐயாறப்பர் எனும் பெயரைப் 'பஞ்நதேஸ்வரர்' எனவும், 'அறம் வளர்த்த நாயகி' எனும் பெயரை 'தர்மஸம்வர்த்தினி' எனவும் மாற்றினர்.

மொழி மாற்ற முறை

தமிழில் வழங்கும் ஒருபெயரை அல்லது சொல்லைச் சமஸ்கிருதத்தில் மாற்றும்போது அத்தமிழ்ச்சொல்லின் பொருளும் கருத்தும் மாறுபடாமல் - பிழைபடாமல் மாற்றிக் கூறுவதே மொழி மாற்ற மரபும் இலக்கணமும் ஆகும்.

எடுத்துக்காட்டு : மலர், பூ என்பதைப் 'புஷ்பம்' என்றும், மகிழ்ச்சி என்பதைச் 'சந்தோஷம்' என்றும், தண்ணீர் என்பதை 'ஜலம்' என்றும் வீடு என்பதை 'க்ருஹம்' என்றும் மொழி மாற்றம் செய்யலாம்.

ஆனால் ஒரு தமிழ்ச் சொல்லின் பொருளும் கருத்தும் மாறுபடவும் பிழைபடவும் கூறுவதும், ஒரு தமிழ்ச் சொல்லைப் பிரித்து அப்பிரிப்பிற்கேற்பப் பொருள்கொண்டு அப்பொருளுக்கேற்பச் சமஸ்கிருதத்தில் தவறான பெயர் கூறுவதும் முறையன்று; ஏற்புடையதுமன்று.

ஐயாறு

இவ்வடிப்படையில்தான், ஐயாறு என்ற தமிழ்ச் சொல்லுக்குச் சமஸ்கிருதத்தில் எவ்வாறு தவறாகப் பொருள்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை விளக்குவதே எளியேன் நோக்கம்.

'ஐயாறு' என்பதை வடமொழியாளர் 'ஐ ஆறு' எனப் பிரித்து, 'ஐ' என்பதற்கு ஐந்து என்றும், 'ஆறு' என்பதற்கு 'நதி' என்றும் பொருள்கொண்டு, ஐந்து என்பதைப் 'பஞ்சம்' என்றனர்.

இதற்கேற்ப ஐயாறு என்பதைப் 'பஞ்சநதி' என்றும், வடமொழியில் ஈஸ்வரன் (இறைவன்) உறையும் இடத்தைக் குறிக்கும் 'ஈஸ்வரம்' என்ற சொல்லைச் சேர்த்துப் பஞ்சநதம் ஈஸ்வரம் = பஞ்சநதீஸ்வரம் என்றனர்.

பஞ்சநதிகள் (ஐந்து ஆறுகள்) இங்கிருப்பதால் பஞ்ச நதீஸ்வரமாம்!

இங்கே ஐந்து நதிகள் எங்கே உள்ளன? காவிரியாறு மட்டுந்தானே திருவையாற்றருகே ஓடுகிறது.

பஞ்ச நதிகளாக அவர்கள் கூறுவது: காவிரி, அதன் தெற்கே 2 கி.மீ. தொலைவில் ஓடும் குடமுருட்டி; அதன் தெற்கே 2 கி.மீ. தொலைவில் வெட்டாறு; அதன் தெற்கே 2 கி.மீ. தொலைவில் வெண்ணாறு, அதன் தெற்கே 2 கி.மீ. தொலைவில் வடவாறு என்று, திருவையாற்றைச் சாராமல் சுமார் 10 கி.மீ. தொலைவில் ஓடும் ஆறுகளை ஐயாற்றுடன் சார்ந்த ஆறுகளாகக் கொண்டு பஞ்சநதீஸ்வரம் எனக் கூறுவது, 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுதல்' என்பார்களே அது போலல்லவா இருக்கிறது; எனவே பஞ்சநதீஸ்வரம் என்பது பொருந்தாக் கூற்று.

காவிரி பாயும் ஐயாற்றுப் பகுதியைப் 'பஞ்சநதிதீரம்' எனக் கூறுவதும் ஏற்புடைத்தன்று.

காவிரிக் கோட்டம்

காவிரியாறு மட்டுமே பாயும் நிலப்பகுதியைக் கொண்டது ஐயாறு. பஞ்சநதிகள் பாயும் பஞ்சநதிதீரம் அல்ல. இதை,

"காவிரிக் கோட்டத்து ஐயாறு"

என்றும்

"வெள்ளம் பரந்து நுரைசிதறி அதிர்க்கும் திரைக்காவிரி"

என்றும் சுந்தரர் பாடினார்.

"முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளம் கொழித்துந்த"

என்று நாவுக்கரசர் பாடினார்.

இவற்றால் ஐயாறு, காவிரி மட்டும் பாயும் காவிரிக் கோட்டமாகும்.

'ஐயாறு'-பொருள் என்ன?

ஐயாறு என்பதில் 'ஐ' 'ஆறு' இரண்டிற்கும் பொருள் வேறு. வடமொழியாளர் கொண்ட பஞ்சநதிகள் அல்ல.

'ஐ' என்பது தமிழ் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டுகள் ஓர் எழுத்து-நெடில். அதோடு இந்த 'ஐ' பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லும் ஆகும். 'ஐ' பொருள் குறிக்கும்போது 'ஓரெழுத்து ஒருமொழி' எனப்படும். அதாவது பூ, கை, மா, தை, பா, கோ, ஆ - இவை போல்வன. இவை ஒவ்வொன்றும் தனித்தனி ஒருபொருளைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழிகள். இவைபோன்றுதான் 'ஐ' என்பதும் ஓரெழுத்து ஒருமொழியாகும். 'ஐ' ஓரெழுத்து ஒருமொழியாகக் குறிக்கும் பொருள்கள்:

அழகு, மேன்மை, பெருமை, சிறப்பு, தலைமை, நுண்மை, கடவுள், அரசன், தந்தை, கணவன், கபம், வியப்பு, ஐயம், ஐந்து என்பன.

ஐயாறு என்ற சொல்லில் 'ஐ', 'ஆறு' இரண்டும் குறிக்கும் பொருள்கள் என்ன?

ஐயாறு என்பதில் 'ஐ' இங்கே கபம் (எச்சில் கோழை) என்ற பொருளைக் குறிக்கும். கபம் என்பது யாது? நம் உடலில், மிகுந்த குளிர்ச்சியால், தட்ப-வெப்பநிலையில் மாற்றம் உண்டாகி நெஞ்சில் சளிதங்கி அது உறைந்து போவதுண்டு. அது 'கபம்' எனப்படும்.

நம் உடலில் காற்று, வெப்பம், குளிர்ச்சி இம்மூன்றும் உண்டு. இவை முறையே வாதம், பித்தம், சிலேட்டுமம் எனப்படும். சிலேட்டுமம் என்பது கபம்.

இம்மூன்றும் உடலில் இருக்க வேண்டிய அளவு மிகாமலும் குறையாமலும் இருக்க வேண்டும். இவற்றுள் எது மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும். இதை

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று

என்கிறார் திருவள்ளுர். வளி-காற்று. மூன்று என்பன காற்று, வெப்பம், குளிர்ச்சியாகும்.

இம்மூன்றுள் மிகுந்த குளிர்ச்சியால் ஏற்படுவது சிலேட்டுமம் என்னும் கபம். ஏனை இரண்டைவிடக் கபத்தால் ஏற்படும் நோய் மிகக் கொடிது; உயிர் போக்கும் தன்மையது.

கபம்

நெஞ்சில் உறைந்த கபம் மிகும்போது மேலே உந்தி எழுந்து சென்று மிடற்றில் (தொண்டைக் குழியில்) தங்கி மூச்சைத் தடுத்து உயிர் போக்கும். இந்த உண்மையை

ஐயினால் மிடறடைப்புண்(டு) ஆக்கை விட்டு
ஆவியார் போதுவமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியம் சூடும்
ஐயனார்க்(கு) ஆளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

என நாவுக்கரசர் திருக்கன்றாப்பூர் பதிகத்தில், 'ஐ'யாகிய கபம் மிடற்றை அடைத்து உயிர்போக்கும் என்தைத் தெளிவாகக் கூறுகிறார்.

மேலும்,

"ஐந்து புலன் நிலைகலங்கும் இடத்தஞ்சேல் என்பார்தம் ஐயாறு" -

என்றும்

"காப்பரிய ஐம்புலனும் காப்பாய் நீயே"

என்றும் நாவுக்கரசர் கூறுகிறார்.

இவ்வாறே ஞானசம்பந்தரும்

“ புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்(டு) 'ஐ' மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சே லென்(று)
அருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே

என ஐயாற்றுப் பதிகத்தில், 'ஐ'யால் வரும் கேடுபற்றிக் கூறுகிறார்.

இதற்கு என்ன பொருள்? 'ஐ'யாகிய கபம் நெஞ்சிலிருந்து மேலே உந்தி எழுந்து ஐம்புல நுகர்ச்சிகளையும் ஐம்பொறி உணர்ச்சிகளையும் கலங்கச் செய்து, நன்னெறி நினைவை மயக்கி, அறிவை அழித்து உயிருக்குத் தீங்கு செய்யும் என்றும், அவ்வாறு உயிர் துன்புறும் போது அஞ்சாதே எனக் கூறி உயிர் நன்னிலையடைதற்குரிய வழிகாட்டும் இறைவன் உறையும் கோயிலைக் கொண்ட ஊர் திருவையாறு என்றும் தெளிவாக் கூறுகிறார் ஞானசம்பந்தர்.

திருவள்ளுவர் கூறுவது

இவ்வாறே திருவள்ளுவர்

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்

எனச் சுருங்கக் கூறினார்.

அதாவது, நாக்கு உணர்ச்சியற்று (ஒடுங்கி) விக்கல் வந்து துன்புறுவதற்கு முன்பே நல்லறச் செயல்கள் செய்ய வேண்டும் என்பதாம்.

நாக்கு உணர்ச்சியற்று ஒடுங்கிப் போவதும் விக்கல் வருவதும் எப்போது? கபம் மிடற்றில் தங்கி மூச்சைத் தேக்கி உயிர் போவதற்கு முன் நிகழ்வனவாகும்.

இதை, ஒருவருக்கு மரணநிலையில் விக்கல் வருமானால் அது உயிர் போவதற்கு அறிகுறி என மக்கள் கூறுவதை அறியலாம்.

இவ்விளக்கம் உணர்த்துவது

மேற்காணும் விளக்கத்தால் அறியப்படும் உண்மை யாது?

'ஐ' எனும் கபம் மிடற்றை அடைத்து உயிர்போக்கும் துன்பம் உண்டாக்கும் என்பதும், அவ்வேளையில் அத்துன்பத்தை நீக்கி உயிர் நன்னிலை அடைய வழிகாட்டி அருள் செய்யும் இறைவன் ஐயாறப்பன் என்பதும் அறிகிறோம். ஐ ஆறு அப்பன்-ஐயாறப்பன். ஐ - கபம் (கபத்தால் உயிர்த்துன்பம்; ஆறு-வழி (உயிர் நன்னிலை அடைவதற்குரிய வழி (அருள்); அப்பன்-இறைவன்.

ஐயாறப்பர், ஐயன், ஐயாறன், ஐயாறனார், ஐயாறர், ஐயாற்றரசு என்றும் அழைக்கப்படுவார்.

இங்ஙனம்,'ஐ' எனும் கபத்தால் உண்டாகும் உயிர்த்துன்பத்தை நீக்கி, உயிர் நன்னிலை அடைய வழிகாட்டும் ஐயாறப்பர் அமர்ந்த கோயில் கொண்ட ஊர் என்பதால் ஐயாறு எனப் பெயர் கொண்டது.

இறைவன் பெயர்சார்ந்த ஊர்கள்

தமிழ்நாட்டில் இறைவன் பெயர்சாந்து ஊர்ப்பெயர்கள் அமைவது தொன்று தொட்டு வரும் வழக்கம்.

அண்ணாமலையார் என்ற இறைவன் பெயர் சார்ந்த ஊர் திருவண்ணாமலை; காளத்தி நாதர் பெயர் சார்ந்த திருக்களத்தி; பழமலை நாதர் பெயர்சார்ந்த பழமலை; நெய்யாடியப்பர் பெயர் சார்ந்த திருநெய்த்தானம்; வெண்ணிக் கரும்பர் பெயர் சார்ந்த திருவெண்ணியூர்;

கோளிலிநாதர் பெயர் சார்ந்த திருக்கோளிலி; வாய்மூர்நாதர் பெயர்சார்ந்த திருவாய்மூர்; மறைக்காட்டு மணாளர் பெயர்சார்ந்த திருமறைக்காடு; புத்தூர் ஈசர் பெயர் சார்ந்த திருப்புத்தூர்; வெண்காட்டீசர் பெயர் சார்ந்த திருவெண்காடு. இவைபோல இன்னும் பல ஊர்கள் இறைவன் பெயர் சார்ந்து அமைந்துள்ளதைப் பரக்கக் காணலாம்.

இவ்வாறு கபத்தால் உயிர் அடையும் துன்பம் நீக்கி அருள்வழிகாட்டும் ஐயாறப்பன் என்னும் இறைவன் பெயர்சாந்து அமைந்த ஊரே திருவையாறு (திருஐயாறு).

பஞ்ச நதிகளால் அமைந்த பெயராகப் பஞ்சநதீஸ்வரம் என்று ஐயாற்றைக் கூறுவது பொருந்தாக் கூற்றும், பொருள் புரியாது திரித்துக் கூறும் பிழைப்பட்ட பெயருமாகும்.

உயர்ந்த தத்துவத்தை உள்ளடக்கி, மானுட உயிர்க்கு அருள்வழங்கும் இறைவன் ஐயாறப்பன் பெயர்சார்ந்த ஊரே ஐயாறு (திருவையாறு) என்பதை உணர்வோமாக.

பஞ்சநதிகளால் வந்த பெயர் பஞ்சநதீஸ்வரம் என்று ஐயாற்றைக் கூறுவது தவறான பெயராகும்.

'திரு' என்பது பெருமை, சிறப்பு, அனைவரும் விரும்பும் தன்மை என்னும் பொருள் குறிக்கும் சிறப்பு அடைமொழியாகும் அது தான் திருவையாறு.

இன்னொரு வேடிக்கை

திருவையாற்றில் தெற்குவீதியிலிருந்து "பூச மண்டபப் படித்துறை வீதி", "திருமஞ்சனவீதி", 'செவ்வாய்க்கிழமைப் படித்துறை' என மூன்று சிறுவீதிகள் காவிரியைத் தொட்டு அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் காரணப்பெயர்.

இவற்றுள் 'பூசமண்டபவீதி'யின் பெயர் பொருள் மாறி வேடிக்கையாகக் கூறப்படுகிறது.

பூசமண்டபவீதி காவிரியைத் தொடுமிடத்தில் ஒரு மண்டபம் உண்டு. காவிரியில் இறங்க இங்குப் படிக்கட்டுகளும் இருக்கின்றன.

இவ்வீதிக்கு இப்பெயர்க் **காரணம் :** தைமாசம் பூச நட்சத்திர நாளன்று ஐயாறப்பரை அம்மையுடன் இம் மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து புனித நீராட்டும் பூசனை வழிபாடுகளும் சிறப்பாகச் செய்யப்படும். அதனால் இவ்வீதிக்குப் பூசமண்டப வீதி என்று பெயர்.

பூச நட்சத்திரத்தை 'புஷ்யம்' என்று வடமொழியில் கூறுவர். அதனால் புஷ்ய மண்டப வீதி என்றும் கூறப்படும்.

இந்த புஷ்யம் என்பதைப் புஷ்பம் என்று கருதிக் கொண்டு பூஷ்பம் என்ற வடிமொழிச் சொல்லைத் தமிழில் கூற வேண்டுமென்ற ஆர்வலர்கள், புஷ்பத்தைக் குறிக்கும் மலர் என்ற சொல்லால் 'மலர் மண்டப வீதி' எனக் கூறத் தொடங்கிவிட்டனர்.

இது நல்ல வேடிக்கை.'. 'புஷ்யம்' பூஷ்பமாகி, புஷ்பம் மலராகி விட்டது.

பூச மண்டப வீதி என்பதே சரியான பெயர். "ஐயாறு" என்ற பெயருக்குத் தான் பெயர்மாற்ற ஆபத்து என்றால் வீதிக்குமா இந்தப் பெயர் மாற்ற ஆபத்து!

ஐயாற்றைப் பஞ்சநதி ஈஸ்வரமென்(று)
ஆக்கினர்தாம் அறியு மாறு
ஐயாற்றின் மெய்ப்பொருளை அன்பர்களே
அனைவர்க்கும் உரைப்பிர் நன்றே.

– ப.அ.